வருடாந்த செயலாற்று அறிக்கை

2021

தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களம்

வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு

2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்று அறிக்கை

தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களம்

செலவினத் தலைப்பு இலக்கம் - 294

உள்ளடக்கம்

அட்டவணைகளின் பட்டியல் ..... **IV**
வரைபுகளின் பட்டியல் ..... **V**
உருக்களின் பட்டியல் ..... **VI**

அத்தியாயம் 01 6

நிறுவனக் கட்டமைப்பு / அமுலாக்கல் சுருக்கம் 1

1.1 அறிமுகம் 1
1.2 நிறுவனத்தின் தொலைநோக்கம், பணிக்கொடை, குறிக்கோள்கள் 1
1.3 பிரதான செயற்பாடுகள் 2
1.4 ஒழுங்கமைப்புத் திட்டம் 2
1.5 தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களம் 4
1.5.1 தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களத்தின்கீழ் அமுலாக்கப்படுகின்ற பூங்காக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் வருகை மற்றும் வருமானம் - 2021 4
1.5.2 மிருகக் காட்சிசாலைகள் திணைக்களத்தின் 2021.12.31 ஆம் திகதிக்கு நிதி முன்னேற்ற அறிக்கைச் சுருக்கம் 7
1.5.3 தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களத்தின் பிரதான அபிவிருத்தி செயற்றிட்டங்களின் நிதி முன்னேற்ற அறிக்கைச் சுருக்கம் 8
1.5.4 மிருகக் காட்சிசாலைகள் திணைக்களத்தின் 2021.12.31 ஆம் திகதிக்கு மிருகங்களின் எண்ணிக்கை 9
1.5.5 தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களத்தினால் மேற்கொள்கின்ற மிருகங்களை பரிமாறுகின்ற நிகழ்ச்சித்திட்டம் மற்றும் மிருகங்களை விலைகொடுத்து வாங்குதல் 9
1.6 திணைக்களத்தின் பிரதான நிறுவனங்கள் மற்றும் அவற்றின் கடமைகள் 10
1.6.1 தெஹிவளை தேசிய மிருகக் காட்சிசாலை 10
1.6.2 பின்னவல யானைகள் சரணாலயம் 13
1.6.3 பின்னவல மிருகக் காட்சிசாலை 15
1.6.4 ஹம்பாந்தோட்டை சபாரி பூங்காவனம் 18
1.6.5 கோணபொல மிருகவள பண்ணை 21
1.7 திணைக்களத்தில் உள்ள நிதியங்கள் 23
1.7.1 அரச திரட்டு நிதி 23
1.7.2 மிருகக் காட்சிசாலைகள் அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியம் 25

அத்தியாயம் 02 27

முன்னேற்றம் மற்றும் எதிர்கால தொலைநோக்கம் 27

அத்தியாயம் 03 29

வருடத்தின் ஒட்டுமொத்த நிதி செயலாற்றல்கள் 29

அட்டவணை 3.1: நிதி செயலாற்று அறிக்கை கூற்று 29

3.2 நிதி நிலைமைகள் பற்றிய கூற்று..... 30
அட்டவணை 3.2: நிதி நிலைமைகள் பற்றிய கூற்று..... 30
3.3 காசுப் பாய்ச்சல் கூற்று..... 31
அட்டவணை 3.3: காசுப் பாய்ச்சல் கூற்று..... 31
3.4 நிதிக் கூற்று குறிப்புகள்..... 33
அட்டவணை 3.4: நிதிக் கூற்று குறிப்புகள்.....
3.5: வருமானத் திரட்டு செயலாற்றல்கள்..... 34
அட்டவணை 3.4: வருமானத் திரட்டு செயலாற்றல்கள் ரூ.,000..... 34
3.6 ஒதுக்கீட்டு நிதிப் பயன்பாடு பற்றிய செயலாற்றல்கள்..... 34
அட்டவணை 3.5: ஒதுக்கீட்டு நிதிப் பயன்பாடு பற்றிய செயலாற்றல்கள் ரூ.,000..... 34
3.7 நி.ஒ.வி.208 இன்படி, ஏனைய அமைச்சுக்கள்; / திணைக்களங்களின் பிரதிநிதியாக இந்தத் திணைக்களத்திற்கு / மாட்ட செயலகத்திற்கு / மாகாண சபைக்கு வழங்கப்பட்ட நிதியொதுக்கீடுகள்..... 34
சம்பந்தப்படாது..... 34
3.8 நிதியல்லாத சொத்துக்களை அறிவித்தல் பற்றிய செயலாற்றல்கள்..... 34
அட்டவணை 3.6: நிதியல்லாத சொத்துக்களை அறிவித்தல் பற்றிய செயலாற்றல்கள் ரூ.,000..... 34
3.9 அட்டவணை 3.9: கணக்காய்வு அதிபதியின் அறிக்கை..... 34
அத்தியாயம் 04..... 35

செயலாற்றுகை குறிகாட்டிகள்..... 35

4.1: நிறுவனத்தின் செயலாற்றுகை குறிகாட்டி..... 35
அட்டவணை 4.1: நிறுவனத்தின் செயலாற்றுகை குறிகாட்டி (நடவடிக்கைத் திட்டத்தை அடிப்படையாகக்கொண்ட)..... 35
அத்தியாயம் 05..... 37

நிலைபேன்தகு அபிவிருத்தி இலக்குகளை (ளுனுபு) அடைவதற்கான செயலாற்றல்கள்..... 37

5.1 இனங்காணப்பட்ட குறித்த நிலைபேன்தகு அபிவிருத்தி இலக்குகள்..... 37
அட்டவணை 5.1: இனங்காணப்பட்ட குறித்த நிலைபேன்தகு அபிவிருத்தி இலக்குகள்..... 37
5.2 நிலைபேன்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் வெற்றிகொண்டவை மற்றும் சவால்கள்38
அத்தியாயம் 06..... 39

மனிதவள பாகம்..... 39

6.1 ஊழியர் தொகை முகாமைத்துவம்..... 39

6.2 நிறுவனத்தின் செயலாற்றுகைக்காக மனிதவள பற்றாக்குறை மீதான தாக்கம்..... 39
6.3 மனிதவள அபிவிருத்தி..... 39
அத்தியாயம் 07..... 41

சார்பு அறிக்கை..... 41

அட்டவணைப் பட்டியல்

அட்டவணை 1.1	2021 ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணிகள் வருகை மற்றும் வருமானம் (மாதாந்தம்)	4
அட்டவணை 1.2	திணைக்களத்தின்கீழ் இருக்கின்ற உப நிறுவனங்களுக்கு சுற்றுலாப் பயணிகள் வருகை மற்றும் வருமானம்	4
அட்டவணை 1.3	2020 – 2021 ஆம் ஆண்டு வரை சுற்றுலாப் பயணிகள் வருகை மற்றும் வருமானம்	5
அட்டவணை 1.4	2010 – 2021 ஆம் ஆண்டு வரை சுற்றுலாப் பயணிகள் வருகை மற்றும் வருமானம்	6
அட்டவணை 1.5	2021.12.31 ஆம் திகதிக்கு நிதியொதுக்கீடு மற்றும் செலவு தகவல்களின் சுருக்கம் (திரட்டு நிதி)	7
அட்டவணை 1.6	2021.12.31 ஆம் திகதிக்கு செலவு தகவல்களின் சுருக்கம்	8
அட்டவணை 1.7	2021.12.31 ஆம் திகதிக்கு திரட்டு நிதியில் அபிவிருத்தி நவடிக்கைகளில் நிதி முன்னேற்றச் சுருக்கம்	8
அட்டவணை 1.8	2021.12.31 ஆம் திகதிக்கு மிருகக் காட்சிசாலை அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதி முன்னேற்றம்	8
அட்டவணை 1.9	2021.12.31 ஆம் திகதிக்கு மிருகக் காட்சிசாலைகள் திணைக்களத்தின் மொத்த விலங்குகளின் எண்ணிக்கை	9
அட்டவணை 1.10	2021.12.31 ஆம் திகதிக்கு தெஹிவளை தேசிய மிருகக் காட்சிசாலையில் மிருகங்களின் எண்ணிக்கை	10
அட்டவணை 1.11	2021.12.31 ஆம் திகதிக்கு தெஹிவளை தேசிய மிருகக் காட்சிசாலையில் மிருக இனப்பெருக்கங்களின் எண்ணிக்கை	10
அட்டவணை 1.12	2021.12.31 ஆம் திகதிக்கு தெஹிவளை தேசிய மிருகக் காட்சிசாலையில் அபிவிருத்தி செயற்றிட்டங்களின் நிதி முன்னேற்றம்	10
அட்டவணை 1.13	2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கல்வி, ஆய்வுகள், பயிற்சிகள் மற்றும் விசேட நிகழ்ச்சிகள்	11
அட்டவணை 1.14	2021.12.31 ஆம் திகதிக்கு பின்னவல யானைகள் சரணாலயத்தில் விலங்குகளின் எண்ணிக்கை	13
அட்டவணை 1.15	2021.12.31 ஆம் திகதிக்கு பின்னவல யானைகள் சரணாலயத்தில் மிருக இனப்பெருக்கங்களின் எண்ணிக்கை	13
அட்டவணை 1.16	2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கல்வி, ஆய்வுகள், பயிற்சிகள் மற்றும் விசேட நிகழ்ச்சிகள்	13
அட்டவணை 1.17	2021.12.31 ஆம் திகதிக்கு பின்னவல யானைகள் சரணாலயத்தில் அபிவிருத்தி செயற்றிட்டங்களின் நிதி முன்னேற்றம்	14
அட்டவணை 1.18	2021.12.31 ஆம் திகதிக்கு பின்னவல மிருகக் காட்சிசாலையில் மிருகங்களின் எண்ணிக்கை	16
அட்டவணை 1.19	2021.12.31 ஆம் திகதிக்கு பின்னவல மிருகக் காட்சிசாலையில் மிருக இனப்பெருக்கங்களின் எண்ணிக்கை	16
அட்டவணை 1.20	2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கல்வி, ஆய்வுகள், பயிற்சிகள் மற்றும் விசேட நிகழ்ச்சிகள்	16
அட்டவணை 1.21	2021.12.31 ஆம் திகதிக்கு பின்னவல மிருகக் காட்சிசாலையில் அபிவிருத்தி செயற்றிட்டங்களின் நிதி முன்னேற்றம்	17
அட்டவணை 1.22	2021.12.31 ஆம் திகதிக்கு ஹம்பாந்தோட்டை சபாரி பூங்காவில் மிருகங்களின் எண்ணிக்கை	19
அட்டவணை 1.23	2021.12.31 ஆம் திகதிக்கு ஹம்பாந்தோட்டை சபாரி பூங்காவில் மிருக இனப்பெருக்கங்களின் எண்ணிக்கை	19
அட்டவணை 1.24	2021.12.31 ஆம் திகதிக்கு ஹம்பாந்தோட்டை சபாரி பூங்காவில் அபிவிருத்தி செயற்றிட்டங்களின் நிதி முன்னேற்றம்	19
அட்டவணை 1.25	2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கல்வி, ஆய்வுகள், பயிற்சிகள் மற்றும் விசேட நிகழ்ச்சிகள்	19
அட்டவணை 1.26	2021.12.31 ஆம் திகதிக்கு கோணபொல மிருகவள பண்ணையில் மிருகங்களின் எண்ணிக்கை	22
அட்டவணை 1.27	2021.12.31 ஆம் திகதிக்கு கோணபொல மிருகவள பண்ணையில் மிருக இனப்பெருக்கங்களின் எண்ணிக்கை	22

அட்டவணை 1.28	செலவு விபரங்கள் - அரச திரட்டு நிதி	23
அட்டவணை 1.29	செலவு விபரங்கள் - மிருகக் காட்சிசாலைகள் அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியம்	25
அட்டவணை 3.1	நிதி செயலாற்று அறிக்கை கூற்று	29
அட்டவணை 3.2	நிதி நிலைமைகள் பற்றிய கூற்று	30
அட்டவணை 3.3	காசுப் பாய்ச்சல் கூற்று	31
அட்டவணை 3.4	வருமானத் திரட்டு செயலாற்றல்கள்	34
அட்டவணை 3.5	ஒதுக்கீட்டு நிதிப் பயன்பாடு பற்றிய செயலாற்றல்கள்	34
அட்டவணை 3.6	நிதியல்லாத சொத்துக்களை அறிவித்தல் பற்றிய செயலாற்றல்கள்	34
அட்டவணை 4.1	நிறுவனத்தின் செயலாற்றுகை குறிகாட்டி	35
அட்டவணை 5.1	இனங்காணப்பட்ட குறித்த நிலைபேன்தகு அபிவிருத்தி இலக்குகள்	37
அட்டவணை 6.1	ஊழியர் தொகை முகாமைத்துவம்	39
அட்டவணை 7.1	சார்பு அறிக்கை	41

வரைபுகள் பட்டியல்

வரைபு 1.1	தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களம் - நிறுவன ஒழுங்கமைப்பு	3
வரைபு 1.2	2021 ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகை	5
வரைபு 1.3	2021 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் வருமானம்	6
வரைபு 1.4	2010 – 2021 வரை சுற்றுலாப் பயணிகளின் வருகை	7
வரைபு 1.5	2010 – 2021 வரை திணைக்களத்தின் வருமானம் ரூ.மி	7

உரு பட்டியல்

உரு 1.1	நீர் யானைகளின் புகலிடம்	12
உரு 1.2	நீர் யானைகளின் புகலிட கழிவு நீர் சுத்திகரிப்பு அலகுகள்	12
உரு 1.3	சமையலறை	12
உரு 1.4	விலங்கு மருத்துவமனை	12
உரு 1.5	சிங்க புகலிடத்தை புதுப்பித்தல்	12
உரு 1.6	மெக்கோ பறவைகளுக்காக புகலிடம்	12
உரு 1.7	யானைகளின் கொட்டகைகள் அமைத்தல்	15
உரு 1.8	பார்வையாளர்களுக்கான கழிப்பறைகள்	15
உரு 1.9	அவசரகாலத்தில் பயன்படுத்தக்கூடிய கதவு மற்றும் வேலி	15
உரு 1.10	மின்சார விநியோக கட்டமைப்பை புதுப்பித்தல்	15
உரு 1.11	நுழைவு கட்டிடத்தின் கூரை மற்றும் பிற புதுப்பித்தல்கள்	15
உரு 1.12	உள் சாலைகள் அமைப்பை புதுப்பித்தல்	17
உரு 1.13	பெங்கொளின்களுக்கான புகலிடம்	18
உரு 1.14	குரங்குகள் தீவு கட்டம் III	18
உரு 1.15	சுதந்திர பறவைகள் சரணாலயத்தில் சேனல்கள் மற்றும் மின்சார வேலிகள்	18
உரு 1.16	ஆறு யானைகளுக்கான புகலிடம்	21
உரு 1.17	வெளிநாட்டு பறவைகளுக்கான புகலிடம்	21
உரு 1.18	விலங்கு பாதுகாப்பு மையங்கள்	21

அத்தியாயம் 01

நிறுவனக் கட்டமைப்பு / அமுலாக்கல் சுருக்கம்

1.1 அறிமுகம்

ஜேர்மனியரான திரு.ஜோன் ஹாகன்பேர்க் என்பவரால் 1905 ஆம் ஆண்டில் காட்டு யானைகளைப் பிடித்து ஜேர்மனியில் அமைந்துள்ள ஹெம்பர்க் நகரத்திற்கு ஏற்றுமதி செய்ய முன் தடுத்து வைப்பதற்காக பயன்படுத்தப்பட்ட ஒரு இடமாக தற்போதைய தேசிய மிருகக்காட்சி சாலை அமைந்துள்ள இடத்தில் 5 ஏக்கர் நிலம் வாங்கி ஆரம்பிக்கப்பட்டது.காலப் போக்கில் மிருகக்காட்சி சாலையில் தடுத்து வைக்கப்பட்ட யானைகள் மற்றும் பிற உயிரினங்களைப் பார்வையிட நாளுக்கு நாள் மக்கள் பெரும் திரளாக வருகை தந்தமையால் மேலும் 11 ஏக்கர் நிலப்பரப்பில் விரிவடைந்து 1926 ஆம் ஆண்டில் "Ceylon Zoological Gardens Company" (சிலோன் மிருகக்காட்சி சாலை நிறுவனம்) என பெயரிடப்பட்டது.

ஐக்கிய இராச்சிய (பிரிட்டிஷ்) அரசினால் இலங்கை மிருகக்காட்சி சாலை 23 ஏக்கர் நிலப்பரப்பில் விரிவாக்கப்பட்டதை அடுத்து, இலங்கை சுதந்திரம் அடைந்த 1946 ஆம் ஆண்டில் சுயாதீன அரச திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டு 1962 ஆம் ஆண்டில் இலங்கை அரசின் மூலம் இலங்கை மிருகக்காட்சி சாலை " தேசிய மிருகக்காட்சி சாலை திணைக்களம்" என வெளியிடப்பட்டது. அதன்படி 1936 ஆம் ஆண்டு ஜூலை 03 ஆம் திகதி அரசினால் சுவீகரிக்கப்பட்டது. தேசிய மிருகக்காட்சி சாலை திணைக்களத்தின் கட்டுப்பாடு மற்றும் மேலாண்மை நடவடிக்கைகள் 1982 இல 41 படி தேசிய மிருகக்காட்சி சாலை சட்டத்தின் விதிகளின் கீழ் வைக்கப்பட்டது.

பின்னர் 70 ஆம் தசாப்தங்களில் தெற்காசியாவின் விஷேட மிருகக்காட்சி சாலை என பெயர் பெற்ற தேசிய மிருகக்காட்சி சாலை திணைக்களம் நிகழ்காலத்தில் தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களத்தின் கீழ் தெஹிவளை தேசிய மிருக் காட்சிசாலை, பின்னவல யானைகள் சரணாலயம், பின்னவல மிருகக் காட்சிசாலையின் இலங்கை வலயம் மற்றும் ரிதியகம சபாரி பூங்காவனம் போன்றவற்றுடன் கோணபல மிருகவள பண்ணை என்பனவும் நிர்வகிக்கப்படுகின்றன. அத்துடன் அந்த உப நிறுவனங்களுடன் இணைந்து குறிக்கோள்களை அடைவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1.2 நிறுவனத்தின் தொலைநோக்கம், பணிக்கொடை, குறிக்கோள்கள்

தொலைநோக்கம்

''உலகின் தலைசிறந்த மிருகக் காட்சிசாலையை நடாத்துகின்ற நிறுவனமாக அமைந்தொழுகுதல்''

பணிக்கொடை

''நவீன மிருகக் காட்சிசாலைகள் எண்ணக்கருக்களின்கீழ், கவர்ச்சிகரமான மற்றும் திறன்களை உபயோகித்து, ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்ட திட்டங்களுக்கு இசைந்து அதியுச்ச பராமரிப்பின்கீழ் நிழல் வழங்கும், பன்மைத்துவம்மிக்க ஆரோக்கியம்வாய்ந்த விலங்குகளின் தொகுதியை காட்சிப்படுத்துதல்.''

குறிக்கோள்கள்

- விலங்குகளின் இனப்பெருக்கம் மற்றும் பாதுகாப்பு
- விலங்குகளின் நலநோம்மபல்
- கல்வி
- ஆய்வுகள்
- காட்சிப்படுத்தல் மற்றும் களியாட்டங்களை வழங்குதல்

1.3 பிரதான செயற்பாடுகள்

குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு கீழ்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற நிறுவனமாக அமைந்தொழுகுதல்.


- இயற்கையான நிலைமைகளுடன் இணைந்தவாறு வதிவிடமொன்றினுள் பல்வகைமையினையுடையதாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விலங்குகளின் தொகுதியொன்றை பராமரித்துச்செல்லல்.
- சர்வதேச சங்கங்கள் மற்றும் மிருகக் காட்சிசாலை வலையமைப்பில் செயற்றிறனுடன் பங்குபற்றுதல் மற்றும் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளல் மற்றும் விலங்குகளைக் பரிமாறிக்கொள்வதில் ஒத்துழைத்தல்.
- அச்சுறுத்தல்களுக்குட்பட்ட, அருகிவருகின்ற மற்றும் நாட்டிற்கேயுரித்தான விலங்குகளின் விசேட தொகுதியின்மீது அதிக கவனம்செலுத்தி வனவிலங்குகளின் வெளிவாரியான பாதுகாப்பினை உறுதிசெய்தல்.
- விலங்குகள் மற்றும் ஏனைய மிருகக் காட்சிசாலை போதனா நடவடிக்கைகள் பற்றிய அறிவினை விரிவுபடுத்துவதற்காக ஆய்வுகளை மேற்கொள்ளல்.
- விலங்குகளின் வாழ்க்கை வட்டத்திற்கு ஆகக் குறைந்த பாதிப்புகள் ஏற்படுகின்றவகையில், அறிவினை விருத்திசெய்தல் மற்றும் களியாட்டங்களில் ஈடுபடுவதற்காக விலங்குகளைக் காட்சிப்படுத்துதல்.
- பசுமை போக்குவரத்து ஊக்குவித்தல் மற்றும் காட்சிப்படுத்தும் நவீன எண்ணக்கருக்கள் மூலம் சுற்றுலாத் தொழில் துறையில் தேவைப்பாடுகளை நிவர்த்திசெய்தல்.
- பாடசாலை மாணவர்களின் முறைசாரா கல்விக்கு உதவும்வகையில் தொலைக்கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
- பொதுமக்களுடன் மற்றும் பாடசாலையுடன் பரஸ்பரம் முக்கியம்வாய்ந்த கல்வி நிகழ்ச்சிகளை முன்னெடுத்தல்.
- மிருகக் காட்சிசாலையை விரும்புகின்ற விசேடமான ஒழுங்கமைப்புகள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொண்டர் பணியாளர்கள், மாணவர்கள் மற்றும் வேலைசெய்ய விருப்பமுள்ள குழுவினர்களை ஊக்குவித்தல்.
- தாவர உண்ணி விலங்குள், விலங்குகளுக்கு உணவு வழங்கும் கோணபொல பண்ணை, கேட்போர்கூடம், மிருக வைத்தியசாலை, தனித்தனியாக அமைக்கப்பட்டுள்ள சேவை இடங்கள், நூதனசாலை மற்றும் நூலகம் போன்ற உதவி சேவைகளை அபிவிருத்தி செய்தல்.
- மிருகக் காட்சிசாலையினுள் தொடர்ச்சியாக பராமரித்தல் மற்றும் ஊழியர்களுக்கு தரங்கள் / பதவியுயர்வுகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்தல்.

1.4 ஒழுங்கமைப்புத் திட்டம்

தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான ஒழுங்கமைப்புத் திட்டம் கீழ்வருமாறு காட்டப்படுகின்றது.

வரைபு 1.1

தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களம் - ஒழுக்கமைப்புத்திட்டம்



மூலம் 1.1:தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களம்

1.5 தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களம்

தேசிய மிருகக்காட்சி சாலைகள் திணைக்களத்தின் பிரதான அலுவலகம் தெஹிவளை மிருகக் காட்சிசாலை வளாகத்தினுள் நிறுவப்பட்டு திணைக்களத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற தெஹிவளை மிருகக் காட்சிசாலை, பின்னவல யானைகள் சரணாலயம், பின்னவல மிருகக் காட்சிசாலை மற்றும் ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா அத்தடன் கோணபல மிருகவள பண்ணை என்னும் பிரதான நடவடிக்கை பிரிவுகள் 05 செயற்படுகிறது. மிருகங்களைக் காட்சிப்படுத்தல் இடம்பெற்றுவருவதுடன், அவற்றின் மூலம் பெறுகின்ற டிக்கட் வருமானம் மற்றும் ஏனைய வருமானங்கள் உட்பட 2021 ஆம் ஆண்டின் திணைக்களத்தின் ஒட்டுமொத்த வருமானம் ரூ.மி.109.57 என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.(அட்டவணை 1.1 மற்றும் 1.2)

1.5.1 தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களத்தின்கீழ் அமுலாக்கப்படுகின்ற பூங்காக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் வருகை மற்றும் வருமானம் - 2021

தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களம் ஆரம்பித்து 85 ஆண்டுகள் நிறைவுபெறுகின்ற வரையில் மிருகக் காட்சிசாலை பொதுமக்கள் பார்வைக்காக தினமும் திறந்திருக்கின்ற நிறுவனமாக அமைந்துள்ளது அதேபோல, உலகளாவிய கொவிட் - 19 தொற்று நிலைமை காரணமாக அரசின் சட்ட திட்டங்களுக்கேற்ப இசைந்து பயணிக்கின்ற திணைக்களத்திற்குரிய சகல நிறுவனங்களும் 2021 ஆம் ஆண்டு ஜனவரி மற்றும் ஜூன் மாதங்களில் பொதுமக்கள் பார்வையை மூடவேண்டியேற்பட்டது. அதன் காரணமாக 2021 ஆம் ஆண்டு தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களத்தின் கீழ் இருக்கின்ற உப நிறுவனங்களுக்கு வருகைதருகின்ற சுற்றுலாப் பயணிகள் மற்றும் அந்த ஆண்டில் நுழைவுச் சீட்டு மூலமான வருமானம் அட்டவணை 1.1 மற்றும் 1.2 மூலம் காட்டப்படுகின்றது.

அட்டவணை 1.1
2021 ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் வருமானம் (மாதாந்தம்)

மாதம்	சுற்றுலாப் பயணிகளின் வருகை			வருமானம் (ரூ.மி)			
	உள்நாட்டு	வெளிநாட்டு	மொத்தம்	உள்நாட்டு	வெளிநாட்டு	ஏனைய	மொத்தம்
ஜனவரி	0	0	0	0	0	0.37	0.37
பெப்ரவரி	53,825	296	54,121	6.99	0.83	0.35	8.17
மார்ச்	82,439	556	82,995	10.93	1.54	1.77	14.24
ஏப்ரல்	102,787	371	103,158	15.93	0.98	1.60	18.51
மே	645	8	653	0.09	0.02	0.09	0.2
ஜூன்	0	0	0	0	0	0	0
ஜூலை	6,447	60	6,507	0.69	0.12	0.85	1.66
ஆகஸ்ட்	7,452	206	7,658	0.92	0.47	0.56	1.95
செப்டம்பர்	13	237	250	0	0.48	0	0.48
அக்டோபர்	45,186	999	46,185	5.13	1.69	0.79	7.61
நவம்பர்	67,519	3,656	71,175	8.57	6.36	3.73	18.66
டிசம்பர்	164,564	7,388	171,952	20.49	12.80	4.43	37.72
மொத்தம்	**530,877**	**13,777**	**544,654**	**69.75**	**25.28**	**14.54**	**109.57**

மூலம் : தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களம் - நிதிப் பிரிவு

அட்டவணை 1.2
திணைக்களத்தின்கீழ் உள்ள நிறுவனங்களுக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் வருமானம் 2021

நிறுவனம் / தேசிய பூங்கா		சுற்றுலாப் பயணிகளின் வருகை			வருமானம் (ரூ.மி)			
		உள்நாட்டு	வெளிநாட்டு	மொத்தம்	உள்நாட்டு	வெளிநாட்டு	ஏனைய	மொத்தம்
1	தெஹிவளை மிருகக் காட்சிசாலை	**266,852**	**1,603**	**268,455**	**25.24**	**2.71**	**8.44**	**36.39**
2	பின்னவல யானைகள் சரணாலயம்	**92,003**	**11,555**	**103,558**	**8.71**	**21.58**	**0.17**	**30.45**
3	பின்னவல மிருகக் காட்சிசாலை	**82,037**	**324**	**82,361**	**7.95**	**0.23**	**3.35**	**11.53**
4	ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா	**89,985**	**295**	**90,280**	**27.86**	**0.76**	**2.58**	**31.19**
	மொத்தம்	**530,877**	**13,777**	**544,654**	**69.75**	**25.28**	**14.54**	**109.57**


கீழ்வரும் அட்டவணை 1.3 இன்படி, 2020 ஆம் ஆண்டில் மற்றும் 2021 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் வருமானம் மாதாந்தம் ஒப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2021 ஆம் ஆண்டில் தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களத்தின் வருடாந்த வருமானம் 50 % ற்கு அண்மித்த மட்டத்தில் கீழ்மட்டத்தைக் காட்டிநின்றது. அதற்காக உலகம்பூராகவும் மிகவிரைவாக பரவிச் செல்கின்ற கொரோனா தொற்று நிலைமையின்கீழ் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையை மட்டுப்படுத்துதல், விலங்குகளின் நலன்களைப் பாதுகாத்தல் போன்ற காரணிகளால் மிருகக் காட்சிசாலையை பொதுமக்களுக்காக வேண்டி மூடிவைப்பதற்கு பிரதான காரணமாக அமைந்தன.

அட்டவணை 1.3
2020 - 2021 வரை சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் வருமானம் (மாதாந்தம்)

மாதம்	சுற்றுலாப் பயணிகளின் வருகை		வருமானம் (ரூ.மி)	
	2020	2021	2020	2021
ஜனவரி	153,778	0	79.68	0.37
பெப்ரவரி	157,303	54,121	59.65	8.17
மார்ச்	87,920	82,995	23.76	14.24
ஏப்ரல்	0	103,158	0	18.51
மே	0	653	0	0.2
ஜூன்	34,574	0	5.04	0
ஜூலை	56,218	6,507	8.09	1.66
ஆகஸ்ட்	75,183	7,658	10.59	1.95
செப்டம்பர்	81,941	250	11.86	0.48
அக்டோபர்	36,781	46,185	5.16	7.61
நவம்பர்	0	71,175	0.84	18.66
டிசம்பர்	0	171,952	0.06	37.72
மொத்தம்	**683,698**	**544,654**	**204.73**	**109.57**


மூலம் : தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களம் - நிதிப் பிரிவு

வரைபு 1.2 - 2021 ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகை (மாதாந்தம்)



மூலம் : தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களம்

வரைபு 1.3 - 2021 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் வருமானம் (மாதாந்தம்)



மூலம் : தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களம் - நிதிப் பிரிவு

மேற்படி 1.2 மற்றும் 1.3 வரைபுகளின்படி, ஜனவரி மற்றும் ஜூன் மாதங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் வருமானம் பூச்சியமாகக் காணப்பட்டது. (திணைக்களத்தின் ஒட்டுமொத்த வருமானம் சுற்றுலாப் பயணிகளின் வருகையின்மீது தீர்மானிக்கப்படுவதால், கொவிட் தொற்று நிலைமையால் பொதுமக்களுக்காகவேண்டி மிருகக் காட்சிசாலைகளை திறக்காமை இதற்கான பிரதான காரணமாக செல்வாக்குச் செலுத்தியுள்ளது.)


தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களத்தின் கடந்த 11 வருடங்கள் வரையில் சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் வருமானம் பற்றிய பகுப்பாய்வு கீழ்வரும் அட்டவணை 1.4 மூலம் காட்டப்பட்டுள்ளது. அதன்படி, 2010 ஆம் ஆண்டுக்கு இணையாக 2018 ஆம் ஆண்டு வரை ஒட்டுமொத்த சுற்றுலாப் பயணிகளது வருகை மற்றும் வருமானம் படிப்படியாக மேலுயர்ந்தமையைக் காட்டிநின்றது. அதற்காக இந்த நாட்டில் அதுவரையில் இருந்த அமைதியான நிலைமை காரணமாக இருந்துள்ளதை அவதானிக்கலாம். அது எவ்வாறு இருப்பினும், 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் காரணமாகவும், 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரை உலகம்பூராகவும் மிகவிரைவாக பரவிய கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக ஒட்டுமொத்த வருமானம் ரூ.மி.109.57 வரை பாரியளவு கீழிறங்கியமையை காட்டிநின்றது.

அட்டவணை 1.4
2010 - 2021 வரை சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் வருமானம்

ஆண்டு	சுற்றுலாப் பயணிகளின் வருகை	வருமானம் (ரூ.மி)
2010	2,324,360	587.74
2011	2,438,635	651.38
2012	2,196,704	645.29
2013	2,172,810	719.87
2014	2,042,887	906.50
2015	2,781,380	1,034.87
2016	2,959,737	1,097.66
2017	2,885,955	998.62
2018	3,097,341	1006.42
2019	2,443,028	766.13
2020	683,698	204.73
2021	544,654	109.57


மூலம் : தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களம்

வரைபு 1.4 2010 - 2021 வரை சுற்றுலாப் பயணிகளின் வருகை



மூலம் : தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களம்

வரைபு 1.5 2010 - 2021 வரை திணைக்களத்தின் வருமானம் ரூ.மி



மூலம் : தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களம்

மேற்படி 1.4 மற்றும் 1.5 வரைபடங்களின்படி, தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களத்தின் சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் நுழைவுச்சீட்டு வருமானம் 2010 ஆம் ஆண்டு முதல் 2018 வரை படிப்படியாக உயர்வடைந்தமையைக் காட்டிநின்றதுடன், 2018 ஆம் ஆண்டின் பிற்பாடு பின்தங்கியதைக் காட்டிநின்றது. அதேபோல 2021 ஆம் ஆண்டில் அதில் குறிப்பிடத்தக்க பின்தங்கிய போக்கினைக் காட்டிநிற்பதற்கு முன்னர் ஏற்கனவே குறிப்பிட்டதற்கினங்க கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக அது இடம்பெறலாயிற்று.

1.5.2 மிருகக் காட்சிசாலைகள் திணைக்களத்தின் 2021.12.31 ஆம் திகதிக்கு நிதி முன்னேற்ற அறிக்கைச் சுருக்கம்

அட்டவணை 1.5
2021.12.31 ஆம் திகதிக்கு நிதியொதுக்கீடு மற்றும் செலவு விபரங்களின் சுருக்கம் (திரட்டு நிதி)

செலவு வகை	2021 மதிப்பீட்டுத் தொகை (ரூ.மி)	2021.12.31 ஆம் திகதிக்கு செலவு (ரூ.மி)	நிதி முன்னேற்றம் %
மூலதனச் செலவினம்	720.8	293.80	41
மீண்டுவரும் செலவினம்	566.0	526.35	93
மொத்தம்	**1286.8**	**820.15**	**64**

மூலம் : தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களம் - நிதிப் பிரிவு

அட்டவணை 1.6
2021.12.31 ஆம் திகதிக்கு செலவு தகவல்களின் சுருக்கம் (மிருகக் காட்சிசாலை அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியம்)

செலவு வகை	2021 மதிப்பீட்டுத் தொகை (ரூ.மி)	2021.12.31 ஆம் திகதிக்கு செலவு (ரூ.மி)	நிதி முன்னேற்றம் %
மூலதனச் செலவினம்	88.02	16.32	19
மீண்டுவரும் செலவினம்	661.53	491.74	74
மொத்தம்	**749.55**	**508.06**	**68**

மூலம் : தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களம் - நிதிப் பிரிவு

1.5.3 தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களத்தின் பிரதான அபிவிருத்தி செயற்றிட்டங்களின் நிதி முன்னேற்ற அறிக்கைச் சுருக்கம்

அரச திரட்டு நிதியிலிருந்து தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களத்தில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி செயற்றிட்டங்களின் முன்னேற்றங்களை கீழ்வரும் அமட்டவணை 1.7 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 1.7
2021.12.31 ஆம் திகதிக்கு திரட்டு நிதியில் அபிவிருத்தி நவடிக்கைகளில் நிதி முன்னேற்றச் சுருக்கம்

தொடர் இலக்கம்	நிகழ்சித்திட்டம்	நிதியொதுக்கீ	நிதி முன்னேற்றம்	
		(ரூ.மி)	(ரூ.மி)	%
1	மூலதன சொத்துக்களின் திருத்தவேலை மற்றும் மேம்படுத்தல்	07.80	07.19	92
2	மூலதன சொத்துக்களை கைப்பற்றுதல்	80.00	11.84	15
3	மனிதவள அபிவிருத்தி	1.00	0.48	48
4	தெஹிவளை மிருகக் காட்சிசாலை அபிவிருத்தி (1)	240.00	86.18	36
5	பின்னவல யானைகள் சரணாலய அபிவிருத்தி (2)	130.00	62.61	48
6	பின்னவல மிருகக் காட்சிசாலை அபிவிருத்தி (3)	150.00	30.10	20
7	ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா அபிவிருத்தி (4)	112.00	95.40	85
		720.80	**293.80**	**41**

மூலம் : தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களம் - நிதிப் பிரிவு

அட்டவணை 1.8
2021.12.31 ஆம் திகதிக்கு மிருகக் காட்சிசாலை அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் நிதி முன்னேற்ற சுருக்கம்

தொடர் இலக்கம்	நிகழ்சித்திட்டம்	நிதியொதுக்கீ	நிதி முன்னேற்றம்	
		(ரூ.மி)	(ரூ.மி)	%
1	தெஹிவளை மிருகக் காட்சிசாலை அபிவிருத்தி	15.00	4.20	28
2	ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா அபிவிருத்தி	25.00	7.15	29
3	பின்னவல புதிய மிருகக் காட்சிசாலை	05.00	3.59	26
4	பின்னவல யானைகள் சரணாலய அபிவிருத்தி	16.00	0	0
5	புதிய நிர்மான வேலைகளுக்காக உபகரணங்களை பெற்றுக்கொள்ளல்	10.00	1.38	14
6	விலங்குகளை விலைகொடுத்து வாங்குதல்	0.01	0	0
7	மருத்துவ உபகரணங்களை விலைகொடுத்து வாங்குதல்	4.00	0	0
8	விலங்குகளை கையகப்படுத்திக் கொள்வதற்கான செலவுகள்	0.01	0	0
	மொத்தம்	**75.02**	**16.32**	**22**

மூலம் : தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களம் - நிதிப் பிரிவு

1.5.4 மிருகக் காட்சிசாலைகள் திணைக்களத்தின் 2021.12.31 ஆம் திகதிக்கு மிருகங்களின் எண்ணிக்கை

அட்டவணை 1.9
2021.12.31 ஆம் திகதிக்கு மிருகக் காட்சிசாலைகள் திணைக்களத்தின் மிருகங்களின் மொத்த எண்ணிக்கை

மிருகங்களின் வகை		விசேட / குடும்பம்	மிருகங்களின் அளவு
தெஹிவளை தேசிய மிருகக் காட்சிசாலை			
1	பாலூட்டிகள்	56	264
2	பறவைகள்	71	781
3	ஊர்வன	36	161
4	மீன்கள் மற்றும் ஏனைய கடல்வாழ் உயிரினங்கள்	71	3131
5	குகை வாழ் உயிரினங்கள்	3	6
	மொத்தம்	**237**	**4343**
பின்னவல யானைகள் சரணாலயம்			
1	பாலூட்டிகள் - ஆசியாவின் யானைகள்	01	76
	மொத்தம்	**01**	**76**
பின்னவல மிருகக் காட்சிசாலை			
1	பாலூட்டிகள்	14	152
2	பறவைகள்	8	49
3	ஊர்வன	3	8
	மொத்தம்	**25**	**209**
ஹம்பாந்தோட்டை சபாரி பூங்காவனம்			
1	பாலூட்டிகள்	34	396
2	பறவைகள்	33	176
3	ஊர்வன	02	346
	மொத்தம்	**69**	**918**
கோணபொல பூங்காவனம்			
1	பாலூட்டிகள்	1	2
2	பறவைகள்	7	24
3	ஊர்வன (ஆமைகள்)	1	113
	மொத்தம்	**9**	**139**

2021.12.31 ஆம் திகதிக்கு தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களத்தின் மிருகங்களின் மொத்த எண்ணிக்கை	**244**	**5,685**

மூலம் : தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களம்

1.5.5 தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களத்தினால் மேற்கொள்கின்ற மிருகங்களை பரிமாறுகின்ற நிகழ்ச்சித்திட்டம் மற்றும் மிருகங்களை விலைகொடுத்து வாங்குதல்

திணைக்களத்தின் நிதி நிர்வாகம் மற்றும் ஊழியர் நிர்வாகம் உட்பட விலங்குகளை பரிமாறுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல் என்பவற்றை தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும்.

மிருகக் காட்சிசாலைகள் திணைக்களத்திற்கு விலங்குகளைப் பெறுகின்ற பிரதான வழிமுறைதான் வெளிநாட்டு மிருகக் காட்சிசாலைகளுடன் தொடர்புகொண்டு விலங்குகளை பரிமாறுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதாகும். இதன்மூலம் திணைக்களத்தின் விலங்குகள் வகைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல், புதிய இனங்களை சேர்த்தல் மூலம் இனவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை முறைப்படி மேற்கொண்டு ஆரோக்கியமான விலங்குகள் பரம்பரையொன்றை உருவாக்குவதே குறிக்கோளாகும்.

உலகம் பூராகவும் வியாபித்துள்ள கொவிட் தொற்று நிலைமை காரணமாக உலகம் பூராகவும் விலங்குகளை பரிமாறுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்வதை தடைசெய்யப்பட்டுள்ளது. அதன்படி, தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களத்தினால் 2021 ஆம் ஆண்டில் எந்தவொரு விலங்குகளையும் பரிமாறுகின்ற நிகழ்ச்சித்திட்டம் மற்றும் விலங்குகளை விலைகொடுத்து வாங்கும் நடவடிக்கை இடம்பெறவில்லை.

1.6 திணைக்களத்தின் பிரதான நிறுவனங்கள் மற்றும் அவற்றின் கடமைகள்

1.6.1 தெஹிவளை தேசிய மிருகக் காட்சிசாலை

ஜேர்மனியரான திரு.ஜோன் ஹாகன்பேர்க் என்பவரால் தனிப்பட்ட விலங்குகள் தொகுதிகளை தங்கவைக்கின்ற இடமாக 1920 இன் முதல் தசாப்தங்களின்போது, 11 ஏக்கர்கள் நிலப்பரப்பில் ஆரம்பிக்கப்பட்டது. 1936 ஆம் ஆண்டு அரசினால் சுவீகரிக்கப்பட்டதுடன், தற்பொழுது 23 ஏக்கர்கள் நிலப்பரப்பில் பரந்து காணப்படுகின்றது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பாலூட்டி விலங்குகள், பறவைகள், ஊர்வன மற்றும் மீன் இனங்கள் பல உள்ளடங்கலாக கல்விசார் பெறுமதிமிக்க விலங்கங்களின் தொகுதி தெஹிவளை மிருகக் காட்சிசாலையில் உண்டு.

தெஹிவளை மிருகக் காட்சிசாலை நவீனமயமாக்கும் பாரிய திட்டத்திற்கேற்ப நவீன மிருகக் காட்சிசாலைகள் எண்ணக்கருக்களுக்கு பொருத்தமானவாறு விலங்ககளின் புகலிடம் நவீனமயமாக்கும் நடவடிக்கைகள் இடம் பெற்றுவருகின்றன. அதன்படி சிங்கம், மான் ஆகிய விலங்குகளின் புகலிடம் பழுது பார்த்தல் , மெகோ கிளிகள் புகலிடம் அமைத்தல், ஹிபோ (கடல் சிங்கம்) விலங்குகளுக்கும் புதிய விலங்குகள் புகலிடமொன்று நிர்மானிக்கப்பட்டு வருகின்றது. அதேபோல ஹிபோ (கடல் சிங்கம்) விலங்குகளின் புகலிடத்தில் கழிவுநீர் சுத்திகரிக்கும் அலகு நிறுவல், நவீன வசதிகளுடன் கூடிய மிருக வைத்தியசாலையொன்றும் நிர்மானிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 1.10
2021.12.31 ஆம் திகதிக்கு தெஹிவளை தேசிய மிருகக் காட்சிசாலையில் மிருகங்களின் எண்ணிக்கை

மிருகங்களின் வகை		விசேட / குடும்பம்	மிருகங்களின் அளவு
1	பாலூட்டிகள்	56	264
2	பறவைகள்	71	781
3	ஊர்வன	36	161
4	மீன்கள் மற்றும் ஏனைய கடல்வாழ் உயிரினங்கள்	71	3131
5	குகை வாழ் உயிரினங்கள்	3	6
	மொத்தம்	**237**	4343

மூலம் : தெஹிவளை மிருகக் காட்சிசாலை

அட்டவணை 1.11
2021.12.31 ஆம் திகதிக்கு தெஹிவளை தேசிய மிருகக் காட்சிசாலையில் மிருக இனப்பெருக்கங்களின் எண்ணிக்கை

மிருகங்களின் வகை		விசேட / குடும்பம	மிருகங்களின் அளவு
1	பாலூட்டிகள்	13	52
2	பறவைகள்	17	85
3	ஊர்வன	2	24
4	மீன்கள் மற்றும் ஏனைய கடல்வாழ் உயிரினங்கள்	4	230
	மொத்தம்	**36**	**391**

அட்டவணை 1.12
2021.12.31 ஆம் திகதிக்கு தெஹிவளை மிருகக் காட்சிசாலையில் அபிவிருத்தி செயற்றிட்டங்களின் நிதி முன்னேற்றம்

நிதியம்	2021 ஆம் ஆண்டுக்காக நிதியொதுக்கீடு (ரூ.மி)	2021 ஆம் ஆண்டுக்காக உண்மைச் செலவினம் (ரூ.மி)	நிதி முன்னேற்றம் %
அரச திரட்டுநிதி	240	86.18	36
மிருகக் காட்சிசாலை அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியம்	15	4.20	28
மொத்தம்	**255**	**90.38**	**35**

அட்டவணை 1.13
2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கல்வி, ஆய்வுகள், பயிற்சிகள் மற்றும் விசேட நிகழ்ச்சிகள்

தொடர் இலக்கம்	நிகழ்ச்சித்திட்டங்கள்	செயற்பாடுகள் / இலக்குக்குழு	செயற்பாடுகளின் அளவு
01	விரிவுரைகள் மற்றும் பிரயோக ரீதியான செயலமர்வுகள்	பல்கலைக்கழக மாணவர்களுக்கான விரிவுரைகள் நடாத்துதல்	03
		பல்கலைக்கழக மாணவர்களுக்கான விரிவுரைகள் நடாத்துதல்(நிகழ்நிலை (online) தொழில்நுட்பம் மூலம்)	02
		பார்வையாளர்களுக்காக விலங்குகள் பற்றிய விளக்க நிகழ்சித்திட்டங்கள்	12
		விலங்குகளின் நடத்தை மேம்படுத்தல் சம்பந்தமான பயிற்சி நிகழ்சித்திட்டங்கள்	03
02	பல்கலைக்கழக நிறுவன பயிற்சி நிகழ்ச்சிகள்	பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிறுவன பயிற்சி	01
03	ஊழியர் நலன்புரிக்காக நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகள்	2021 ஆம் ஆண்டில் ஊழியர் நலன் கருதி நிகழ்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்படவில்லை	-
04	விசேட நிகழ்ச்சிகள்	விலங்குகளின் நலன்களை மேம்படுத்துவதன் மூலம் கட்டப்பட்ட ஹிபோ (கடல் சிங்கம்) விலங்குகளின் புகலிடம் 11 ஊடக நிறுவனங்களின் அனுசரணையுடன் பொது மக்களின் பார்வைக்காக திறந்து வைக்கப்பட்டது.	
		சிவப்பு விஷப் பாம்பு உட்பட 05 வகையான மலைப் பாம்புகள், 03 ஊடக நிறுவனங்களின் அனுசரணையுடன் பொது மக்களுக்கு அறிமுகப்படுத்தல்	
		05 அன்னக் குஞ்சுகளின் பிறப்பு பற்றி , 04 ஊடக நிறுவனங்களின் அனுசரணையுடன் நாட்டிற்கே அறிமுகப்படுத்தும் நிகழ்சித் திட்டம் நடாத்தப்பட்டது.	
		பாலூட்டி இனத்தின் 05 விஷேட உயிரினங்களில் புதிதாகப் பிறந்த குட்டிகளின் பெயர்சூட்டு விழா கிறிஸ்மஸ் தினத்தன்று ஏற்பாடு செய்யப்பட்டு, 14 ஊடக நிறுவனங்களின் அனுசரணையுடன் பொது மக்களுக்கு அறிமுகப்படுத்தல்.	

மூலம் : தெஹிவளை மிருகக் காட்சிசாலை

குறிப்பு: அட்டவணை 1.13 மூலம் காட்டப்பட்டுள்ள கல்வி. ஆய்வுகள், பயிற்சிகள் மற்றும் விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் கொவிட் தொற்று நிலைமை காரணமாக எதிர்பார்க்கப்பட்ட அளவில் மேற்கொள்ள முடியவில்லை.

தெஹிவளை தேசிய மிருகக் காட்சிசாலை திணைக்களத்தின் பௌதீக முன்னேற்றம்

நவீன மிருகக் காட்சிசாலைகள் எண்ணக்கருக்களுக்கு ஏற்ப விலங்குகளுக்கு அதிகளவு இடவசதியுடன் புகலிடம் மற்றும் பார்வையாளர்களுக்கான நவீன வசதிகளை வழங்குவதற்காக 2010 ஆம் ஆண்டிலிருந்து தெஹிவளை மிருகக் காட்சிசாலையின் திருத்தவேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. அதன்படி, 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பிரதான அபிவிருத்தி வேலைகள் பற்றிய தகவல்களை கீழ்வருமாறு காட்டப்படுகின்றது.

அரச திரட்டு நிதியிலிருந்து அமுல்படுத்தப்படுகின்ற செயற்றிட்டங்கள்

- மிருக வைத்தியசாலை நிர்மாணனம் மற்றும் கட்டுமான வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.
- ஹிபோ புகலிடம் நிர்மானிக்கும் நடவடிக்கைகளை திரும்ப மேற்கொள்ளப்பட்டதுடன் கட்டுமான வேலைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன.
- ஹிபோ (கடல் சிங்கம்) புகலிடத்தின் கழிவுநீர் சுத்திகரிப்பு பகுதியை நிறுவுகின்ற வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.
- விலங்குகளின் உணவு தயாரிக்கும் சமையலறையின் கட்டுமான வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.
- சிங்கங்களின் புகலிட பழுது பார்த்தல் நடவடிக்கைகள் 50% நிறைவு செய்யப்பட்டுள்ளன.
- மெகோ கிளிகளின் புகலிடம் கட்டுமான வேலைகள் 40% நிறைவு செய்யப்பட்டுள்ளன.

- மான்களின் புகலிட பழுது பார்த்தல் நடவடிக்கைகள் 15% நிறைவு செய்யப்பட்டுள்ளன
- கோணபொல பண்ணையில் நிர்மானிக்கப்பட்டுவருகின்ற விலங்குகளின் பாதுகாப்பு நிலைய கட்டுமான வேலைகள் 85% வரையில் நிறைவுசெய்யப்பட்டுள்ளன. எறும்பு உண்ணி (பென்கொலின்), தேவாங்கு, பச்சை சிறுத்தை போன்ற விலங்குகளைப் பாதுகாப்பதற்காக)

மிருகக் காட்சிசாலைகள் அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற செயற்றிட்டங்கள்

- கோணபொல பண்ணையில் சிறிய அளவு அபிவிருத்தி வேலைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன.
- நுழைவிடத்தின் தரை அலங்காரம் மற்றும் கழிவறை அமைப்புத்திட்டத்தின் கட்டுமான வேலைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன.

உரு 1.1 - நீர் யானைகளின் புகலிடம்



உரு 1.2 - நீர் யானைகளின் புகலிட கழிவு நீர் சுத்திகரிப்பு அலகுகள்



உரு 1.3 - சமையலறை



உரு 1.4 – விலங்கு மருத்துவமனை



உரு 1.5 - சிங்க புகலிடத்தை புதுப்பித்தல்



உரு 1.6 - மெக்கோ பறவைகளுக்காக புகலிடம்



1.6.2 பின்னவல யானைகள் சரணாலயம்

1975.02.16 ஆம் திகதி 25 ஏக்கர்கள் காணியில் குமாரி, மாதலி, விஜய, கதிரா மற்றும் நீலா போன்ற ஐந்து சிறிய யானைக் குட்டிகளுடன் ஆரம்பிக்கப்பட்ட பின்னவல யானைகள் சரணாலயம் தற்பொழுது 46 வருடங்களைக் கடந்துவந்துள்ளது.

ஆரம்பத்தில் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் விடயப்பரப்பின்கீழ் அமுல்படுத்தப்பட்டிருந்த யானைகள் சரணாலயம் 1982 ஆம் ஆண்டில் தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களத்தின்கீழ் உள்ளடக்கப்பட்டது. யானைகளைப் பாதுகாத்தல் மற்றும் இனவிருத்தி செய்வதனை பிரதான குறிக்கோளாகக் கொண்டு இதனை ஆரம்பிக்கப்பட்டபோதிலும், இதுவரையில் விலங்குகளின் நலன்கள், இனவிருத்தி, சுற்றுலாக் கைத்தொழில், கல்வி மற்றும் ஆய்வு நடவடிக்கைகள் மற்றும் களியாட்டங்களை விரிவுபடுத்துதல் போன்ற பரந்துபட்ட நோக்கங்களை விருத்திசெய்யும் கடமைப்பொறுப்புக்களை ஆற்றிவருகின்றன.

பின்னவல யானைகள் சரணாலயம் ஆசிய யானைகள் பாதுகாப்பு மற்றும் இனவிருத்தி நிலையமாக உலகின் முதன்மை நடவடிக்கைகள மேற்கொள்கின்ற இடமாக இருப்பதுடன் ஆசிய யானைகள் பலவற்றை கூட்டமாக ஒரே தடவையில் காணக்கூடிய ஒரே இடமாகவும் ஒள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் கவர்ச்சிமிக்க இடமாகவும் பிரபலமடைந்துள்ளது.

இயற்கை சூழலை அண்மித்தவாறு சுற்றாடலில் வாழ்கின்ற பின்னவல யானைகள் சரணாலயத்தின் யானைகளிடையே விஜய என்னும் பெயரையுடைய யானை தந்தைக்கும் குமாரி என்னும் பெயரையுடைய யானை தாய்க்கும் 1984 ஆம் ஆண்டில் சுகுமலி என்னும் பெயரையுடைய முதலாவது யானைக்குட்டி பிறந்ததாக அறிவிக்கப்படுகின்றது. அத்துடன் தொடங்கி 73 யானைக் குட்டிகள் இயற்கையாகப் பிறந்திருக்கின்றன. இது வெற்றிகரமானதொரு விலங்கு இனவிருத்தி செயன்முறையாக தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்றது.மேலும் ஆண்டில் விலங்கு இனவிருத்தி விஷேட செயன்முறையாக பின்னவல யானைகள் சரணாலயத்தில் முதல் இரட்டை யானைக்குட்டிகள் பிறந்துள்ளது. அவ் இரட்டை ஆண் யானைக்குட்டிகளுக்கு சஜ்ஜன மற்றும் திஸா என பெயர்சூட்டப்பட்டது.

அட்டவணை 1.14
2021.12.31 ஆம் திகதிக்கு பின்னவல யானைகள் சரணாலயத்தில் விலங்குகளின் எண்ணிக்கை

மிருகங்களின் வகை		விசேட / குடும்பம	மிருகங்களின் அளவு
1	பாலூட்டிகள் - ஆசிய யானை	01	76
	மொத்தம்	**01**	**76**

மூலம் : பின்னவல யானைகள் சரணாலயம்

அட்டவணை 1.15
2021.12.31 ஆம் திகதிக்கு பின்னவல யானைகள் சரணாலயத்தில் மிருக இனப்பெருக்கங்களின் எண்ணிக்கை

மிருகங்களின் வகை		விசேட / குடும்பம்	மிருகங்களின் அளவு
1	பாலூட்டிகள் - ஆசிய யானை	01	03

மூலம் : பின்னவல யானைகள் சரணாலயம்

அட்டவணை 1.16
2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கல்வி, ஆய்வுகள், பயிற்சிகள் மற்றும் விசேட நிகழ்ச்சிகள்

தொடர் இலக்கம்	கல்விசார் நிகழ்ச்சிகளின் வகை	செயற்பாடுகள் / இலக்குக்குழு	செயற்பாடுகளின் அளவு
01	விரிவுரைகள் மற்றும் பிரயோக ரீதியான செயலமர்வுகள்	பல்கலைக்கழக திட்டங்கள் சம்பந்தமாக மாணவர்களை விழிப்புணர்வு செய்தல்	02

02	ஊழியர் நலன்புரிக்காக நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகள்	2021 ஆம் ஆண்டில் பணியாளர் நலன் கருதி நிகழ்சிகள் எதுவும் நடாத்தப்படவில்லை	00
03	விசேட நிகழ்ச்சிகள் மற்றும் ஞாபகார்த்த தின வைபவங்கள்	• 2021 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி பின்னவல யானைகள் சரணாலயத்தின் 46 ஆவது ஆண்டு விழாவிற்கு குஞ்சுநாதய 2021 எனும் பெயரில் விஷேட விழா நடாத்தப்பட்டு அத்துடன் யானைகளுக்கு இலை குலைகள்,பழங்கள் மற்றும் போசணை மிகுந்த பாற்சோறு அன்ன தானம் வழங்கப்பட்டது. • புத்தாண்டு எண்ணை தேய்த்தல் விழா • கிறிஸ்மஸ் தின விழா கொண்டாட்டம்	
04	பயிற்சி நிகழ்ச்சிகள்	2021 ஆம் ஆண்டில் பயிற்சி நிகழ்சித் திட்டங்கள் எதுவும் இடம்பெறவில்லை.	

மூலம் : பின்னவல யானைகள் சரணாலயம்

அட்டவணை 1.17
2021.12.31 ஆம் திகதிக்கு பின்னவல யானைகள் சரணாலயத்தில் அபிவிருத்தி செயற்றிட்டங்களின் நிதி முன்னேற்றம்

நிதியம்	2021 ஆம் ஆண்டுக்காக நிதியொதுக்கீடு (ரூ.மி)	2021 ஆம் ஆண்டுக்காக உண்மைச் செலவினம் (ரூ.மி)	நிதி முன்னேற்றம் %
அரச திரட்டுநிதி	130	62.61	48
மிருகக் காட்சிசாலை அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியம்	16	0	0
மொத்தம்	**146**	**62.61**	**43**

மூலம் : தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களம் - நிதிப் பிரிவு

குறிப்பு: அட்டவணை 1.16 மூலம் காட்டப்பட்டுள்ள கல்வி. ஆய்வுகள், பயிற்சிகள் மற்றும் விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் கொவிட் தொற்று நிலைமை காரணமாக எதிர்பார்க்கப்பட்ட அளவில் மேற்கொள்ள முடியவில்லை.

பின்னவல யானைகள் சரணாலயத்தின் பௌதீக முன்னேற்றம்

2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பிரதான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பற்றிய தகவல்கள் பின்வருமாறு காட்டப்படுகின்றது.

அரச திரட்டுநிதி மூலம் அமுல்படுத்தப்பட்ட செயற்றிட்டங்கள்

- மின்சார விநியோக வலையமைப்பை திருத்தியமைக்கும் வேலைகள் 80 % நிறைவுசெய்யப்பட்டுள்ளது.
- யானைகளின் புதிய புகலிட நிர்மான வேலைகள் 65% நிறைவுசெய்யப்பட்டுள்ளன.
- உள்நாட்டு வெளிநாட்டு பார்வையாளர்களுக்கான கழிவறை தொகுதியின் வேலைகள் 50% நிறைவுசெய்யப்பட்டுள்ளது.
- அவசர நிலைமைகளில பயன்படுத்தப்படும் வாயில் மற்றும் வேலி நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- சரளை சாலைகள் மற்றும் இயற்கை அலங்காரங்கள் திருத்தியமைக்கும் வேலைகளுக்கான ஒப்பந்தம் கையளிக்கப்பட்டுள்ளது.
- பிரதான கட்டிடத்தின் கூரை மற்றும் ஏனைய திருத்தியமைக்கும் வேலைகள் 85% நிறைவுசெய்யப்பட்டுள்ளது.
- இருக்கின்ற குளத்தை விரிவாக்குவதற்கு அடிப்படையான வேலைகளை நிறைவுசெய்யப்பட்டுள்ளன.

உரு 1.7 - யானைகளின் கொட்டகைகள் அமைத்தல்



உரு 1.8 – பார்வையாளர்களுக்கான கழிப்பறைகள்



உரு 1.9 – அவசரகாலத்தில் பயன்படுத்தக்கூடிய கதவு



உரு 1.10 – மின்சார விநியோக கட்டமைப்பை புதுப்பித்தல்



உரு 1.11 - நுழைவு கட்டிடத்தின் கூரை மற்றும் பிற புதுப்பித்தல்கள்





1.6.3 பின்னவல மிருகக் காட்சிசாலை

இலங்கையின் முதல் திறந்தவெளி மிருகக் காட்சிசாலையாக 36 ஏக்கர்கள் காணியில் பின்னவல திறந்தவெளி மிருகக் காட்சிசாலையின் முதற் கட்டமாக 2015 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் 17 ஆம் திகதி உள்நாட்டு வெளிநாட்டு பார்வையாளர்களுக்காக திறந்து வைக்கப்பட்டது. நவீன மிருகக் காட்சிசாலை கருத்துக்களுக்கு ஏற்ப விலங்குகளின் நலன்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, சுற்றுலாப் பயணிகளுக்காக அழகான நினைவுகளை சேகரிக்க கூடிய ஒரு புகலிடமாகவும் பின்னவலை யானைகள் சரணாலயத்தைப் பார்வையிட வருகைதருகின்ற சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையிலும் மற்றும் கல்வி. ஆய்வுகள் மையமாகவும் அறிமுகப்படுத்தப்படுகிறது.

இந்த மிருகக் காட்சிசாலை இயற்கை சூழலுக்கு அமைய இலங்கை சிறுத்தைகளின் புகலிடம், கலப்பு மான்களின் புகலிடம், முதலைகளின் புகலிடம் போன்ற விலங்குகளின் புகலிடங்களை நிர்மானிப்பதற்கான நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டு காட்சிப்படுத்தல்களுக்காக திறந்துவிடப்பட்டுள்ளன. இலங்கைக்கே உரித்தான சிறுத்தைகளின் புகலிடத்திறகு அருகாமைக்கே சென்று அவற்றுக்கே உரித்தான சிறப்பு நடத்தைகளை பார்வையிடும் வகையில் புகலிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

மிருகக் காட்சிசாலையில் உயிரிலக்கும் விஷேட விலை மதிப்புள்ள விலங்குகளை பாதுகாப்பதன் மூலம் பின்னவல மிருகக் காட்சிசாலையின் அருங்காட்சியகம் 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11 ஆம் திகதி பார்வையாளர்களுக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 1.18
2021.12.31 ஆம் திகதிக்கு பின்னவல மிருகக் காட்சிசாலையில் மிருகங்களின் எண்ணிக்கை

மிருகங்களின் வகை		விசேட / குடும்பம்	மிருகங்களின் அளவு
1	பாலூட்டிகள்	14	152
2	பறவைகள்	8	49
3	ஊர்வன	3	8
	மொத்தம்	**25**	**209**

அட்டவணை 1.19
2020.12.31 ஆம் திகதிக்கு பின்னவல மிருகக் காட்சிசாலையில் மிருக இனப்பெருக்கங்களின் எண்ணிக்கை

மிருகங்களின் வகை		விசேட / குடும்பம்	மிருகங்களின் அளவு
1	பாலூட்டிகள்	05	23
	மொத்தம்	**05**	**23**

அட்டவணை 1.20
2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கல்வி, ஆய்வுகள், பயிற்சிகள் மற்றும் விசேட நிகழ்ச்சிகள்

தொடர் இலக்கம்	கல்விசார் நிகழ்ச்சிகளின் வகை	செயற்பாடுகள் / இலக்குக்குழு	செயற்பாடுகளின் அளவு
01	விரிவுரைகள் மற்றும் பிரயோக ரீதியான செயலமர்வுகள்	-	-
02	ஊழியர் பயிற்சி நிகழ்ச்சிகள்	தேசிய உற்பத்தித் திறன் செயலகம் மூலம் நடாத்தப்படும் பயிற்சி நிகழ்ச்சி திட்டங்கள்	01
03	விசேட நிகழ்ச்சிகள் மற்றும் ஞாபகார்த்த தின வைபவங்கள்	2021 டிசம்பர் மாதத்தை அடிப்படையாகக் கொண்டு கிறிஸ்மஸ் நிகழ்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படல்.	

மூலம் : பின்னவல மிருகக் காட்சிசாலை

அட்டவணை 1.21 2021.12.31 ஆம் திகதிக்கு பின்னவல யானைகள் சரணாலயத்தில் அபிவிருத்தி செயற்றிட்டங்களின் நிதி முன்னேற்றம்			
நிதியம்	2021 ஆம் ஆண்டுக்காக நிதியொதுக்கீடு (ரூ.மி)	2021 ஆம் ஆண்டுக்காக உண்மைச் செலவினம் (ரூ.மி)	நிதி முன்னேற்றம் %
அரச திரட்டுநிதி	150.00	30.10	20
மிருகக் காட்சிசாலை அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியம்	05.00	3.59	72
மொத்தம்	**155.00**	**33.69**	**22**

பின்னவல மிருகக் காட்சிசாலையின் பௌதீக முன்னேற்றம்

2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பிரதான அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் கீழ்வருமாறு காட்டப்படுகின்றது.

அரச திரட்டுநிதி மூலம் அமுல்படுத்தப்படுகின்ற செயற்றிட்டங்கள்

- உள்ளக சாலை அமைப்பு, மழை நீர் வடிகாலமைப்பு மற்றும் உள்ளக மின்சார விநியோக நிர்மாணப் பணிகள் 70 % நிறைவுபெற்றுள்ளன.
- ஸ்கேர்குரு (Scarecrow) விலங்கின் புகலிட நிர்மாணப் பணிகள் 50 % நிறைவுபெற்றுள்ளன.
- குரங்கு தீவின் 111 ஆம் கட்ட நிர்மாணப் பணிகள் நிறைவுபெற்றுள்ளன.
- மோதரவத்த வாகன நிறுத்துமிட நிர்மாணப் பணிகள் 65 % நிறைவுபெற்றுள்ளன.
- பார்வையாளர்களுக்கான கழிப்பறைகள் நிர்மாணப் பணிகள் 60 % நிறைவுபெற்றுள்ளதோடு அடுத்த கட்டப் பணிகளை தொடர்வதற்காக மீண்டும் டென்டர் அழைப்பிற்கான வேலைகள் முன்னெடுக்கப்படுகிறது.

மிருகக் காட்சிசாலையின் அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்தின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற செயற்றிட்டங்கள்

- பறவைகளின் சுதந்திர புகலிட பிரதேசத்தில் சேன்லின் மற்றும் மின்சார வேலி அமைக்கும் வேலைகள் நிறைவடைந்துள்ளன.
- அணுகல் கட்டிடத்தின் (Water Proofing Work) நிர்மாணப் பணிகள் 90 % நிறைவுபெற்றுள்ளன. அடுத்த கட்டப் பணிகளை தொடர்வதற்காக மீண்டும் டென்டர் அழைப்பிற்கான வேலைகள் முன்னெடுக்கப்படுகிறது.

உரு 1.12 – உள் சாலைகள் அமைப்பை புதுப்பித்தல்



உரு 1.13 – பெங்கொளின்களுக்கான புகலிடம்

உரு 1.14 – குரங்குகள் தீவு கட்டம் III



உரு 1.15 - சுதந்திர பறவைகள் சரணாலயத்தில் சேனல்கள் மற்றும் மின்சார வேலிகள்



மூலம் : பின்னவல மிருகக் காட்சிசாலை

1.6.4 ஹம்பாந்தோட்டை சபாரி பூங்காவனம்

நவீன மிருகக் காட்சிசாலைகள் எண்ணக்கருவின்படி 500 ஏக்கர்கள் காணியில் நிர்மாணிக்கப்பட்டுவருகின்ற சபாரி பூங்காவின் முதலாவது கட்டம் 2016 மார்ச் 28 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. சிங்கங்களின் வலயம், உலக விலங்குகளின் வலயம் மற்றும் ஆசிய யானைகளின் வலயம் என்பன முதற்கட்டமாக பொதுமக்கள் பார்வைக்காக திறந்துவிடப்பட்டது. வங்காள சிறுத்தைகளின் வலயம் மற்றும் ஆசிய விலங்குகளின் வலயம் என்பன தற்பொழுது பார்வைக்காக திறந்துவிடப்பட்டுள்ளன. நிர்மாணிக்கப்பட்டுவருகின்ற விலங்குகளின் வலயங்களினிடையே ஆபிரிக்க தாவரவுண்ணி விலங்குகளின் வலயம், இலங்கை சிறுத்தைகளின் வலயம், அவுஸ்திரேலிய வலயம், சீட்டாக்களின் வலயம் மற்றும் சிம்பன்சிகளின் வலயம் என்பன அடங்கும்.

அத்துடன் பறவைகள், சிறிய ஊணுண்ணி விலங்குகள், குரங்குகளின் வகைகள், சிறிய தாவரவுண்ணிகள் மற்றும் வண்ணத்துப் பூச்சிகளின் பூங்கா உள்ளிட்ட 35 ஏக்கர்கள் நிலப்பரப்பினைக் கொண்ட சிறிய சபாரி பூங்காவனமும், 10 ஏக்கர்கள் நிலப்பரப்பினைக்கொண்ட ஊர்வனங்களின் இடம் மற்றும் 10 ஏக்கர்கள் நிலப்பரப்பினைக் கொண்ட பாதுகாக்கப்படவேண்டிய விலங்குகளுக்காக ஒதுக்கப்பட்ட விலங்குகளின் இனவிருத்தி மற்றும் பாதுகாப்பு நிலையமும் நிர்மாணிக்கப்பட்டுவருகின்றன.

இலங்கையர்க்கு சபாரி செல்லும் அனுபவத்தை வழங்கும்பொருட்டு சுற்றாடல்நேயம்மிக்க பயணங்களை மேற்கொள்வதனை ஊக்குவிப்பதற்குப் பங்களிப்புச் செய்தல், மிருகக் காட்சிசாலையின் விலங்குகளின் இனவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல், விலங்குகளின் பாதுகாப்பு வேலைத்திட்டங்களின் மூலம் தனிமைப்படுத்தப்பட்ட விலங்குகளின் பரம்பரை தொகுதியை மேம்படுத்துவதற்கும் பிரதான குறிக்கோளாகக் கொள்ளப்பட்டுள்ளது.

அட்டவணை 1.22
2021.12.31 ஆம் திகதிக்கு ஹம்பாந்தோட்டை சபாரி பூங்காவில் மிருகங்களின் எண்ணிக்கை

மிருகங்களின் வகை		விசேட / குடும்பம்	மிருகங்களின் அளவு
1	பாலூட்டிகள	34	396
2	பறவைகள	33	176
3	ஊர்வன	02	346
	மொத்தம்	**69**	**918**

மூலம் : ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா

அட்டவணை 1.23
2021.12.31 ஆம் திகதிக்கு ஹம்பாந்தோட்டை சபாரி பூங்காவில் மிருக இனப்பெருக்கங்களின் எண்ணிக்கை

மிருகங்களின் வகை		விசேட / குடும்பம்	மிருகங்களின் அளவு
1	பாலூட்டிகள்	15	31
2	பறவைகள்	32	63
	மொத்தம	**47**	**94**

மூலம் : ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா

அட்டவணை 1.24
2021.12.31 ஆம் திகதிக்கு ஹம்பாந்தோட்டை சபாரி பூங்காவில் அபிவிருத்தி செயற்றிட்டங்களின் நிதி முன்னேற்றம்

நிதியம்	2021 ஆம் ஆண்டுக்காக நிதியொதுக்கீடு (ரூ.மி)	2021 ஆம் ஆண்டுக்காக உண்மைச் செலவினம் (ரூ.மி)	நிதி முன்னேற்றம் %
அரச திரட்டுநிதி	112.00	95.40	85
மிருகக் காட்சிசாலை அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியம்	25.00	7.15	29
மொத்தம்	137.00	**102.55**	**75**

அட்டவணை 1.25
2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கல்வி, ஆய்வுகள், பயிற்சிகள் மற்றும் விசேட நிகழ்ச்சிகள்

தொடர் இலக்கம்	கல்விசார் நிகழ்ச்சிகளின் வகை	செயற்பாடுகள் / இலக்குக்குழு	செயற்பாடுகளின் அளவு
01	விரிவுரைகள் மற்றும் பிரயோக ரீதியான செயலமர்வுகள்	பரவிச் செல்கின்ற கொரோனா தொற்று நிலைமையின் காரணமாக தொடர்புடைய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவில்லை.	-
02	ஊழியர் பயிற்சி நிகழ்ச்சிகள்	தேசிய உற்பத்தித் திறன் செயலகம் மூலம் நடாத்தப்படும் பயிற்சி நிகழ்ச்சி திட்டங்கள்	01
03	விசேட நிகழ்ச்சிகள் மற்றும் ஞாபகார்த்த தின வைபவங்கள்	2021 டிசம்பர் மாதத்தை அடிப்படையாகக் கொண்டு கிறிஸ்மஸ் நிகழ்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படல்.	
04	ஆய்வுகள்	பரவிச் செல்கின்ற கொரோனா தொற்று நிலைமையின் காரணமாக தொடர்புடைய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவில்லை.	

மூலம் : தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களம் - நிதிப் பிரிவு

குறிப்பு: அட்டவணை 1.25 மூலம் காட்டப்பட்டுள்ள கல்வி. ஆய்வுகள், பயிற்சிகள் மற்றும் விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் கொவிட் தொற்று நிலைமை காரணமாக எதிர்பார்க்கப்பட்ட அளவில் மேற்கொள்ள முடியவில்லை.

ஹம்பாந்தோட்டை சபாரி பூங்காவனத்தின் பௌதீக முன்னேற்றம்

2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பிரதானமான அபிவிருத்தி வேலைகள் பற்றிய தகவல்கள் கீழ்வருமாறு காட்டப்படுகின்றது.

அரச திரட்டு நிதி மூலம் அமுல்படுத்தப்படுகின்ற செயற்றிட்டங்கள்

- சிறிய சபாரி பூங்காவில்
  - சேவை வழங்கும் வழி இன் 50% வேலைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன. அடுத்த கட்டப் பணிகளை தொடர்வதற்காக மீண்டும் டென்டர் அழைப்பிற்கான வேலைகள் முன்னெடுக்கப்படுகிறது.
  - செல்லப் பிராணிகள் வலயத்தின் நிர்மாண வேலைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன.
- வெளிநாட்டு பறவைகளின் வலயத்தின் 50% வேலைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன.
- சிறுத்தைகளின் வலயம்
  - சிறுத்தைகளுக்கான குகைகள் மற்றும் தங்குமிடங்களின் 40% வேலைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன. அடுத்த கட்டப் பணிகளை தொடர்வதற்காக மீண்டும் டென்டர் அழைப்பிற்கான வேலைகள் முன்னெடுக்கப்படுகிறது.
  - தரை அலங்கார நடவடிக்கைகளின் வேலைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன.
  - ஆசியா யானைகளின் வலயம் மற்றும் சிறுத்தைகளின் வலயம் என்பவற்றினிடையே 16 அடி உயரம் வரையில் சங்கிலி வேலி அமைக்கும் வேலைகள் 55% நிறைவுசெய்யப்பட்டுள்ளன.
- விலங்குகளின் பாதுகாப்பு நிலையத்தின் வேலைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன.
  - தாவரக் கூடாரங்களின் (Tree Huts) 35% வேலைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன. அடுத்த கட்டப் பணிகளை தொடர்வதற்காக மீண்டும் டென்டர் அழைப்பிற்கான வேலைகள் முன்னெடுக்கப்படுகிறது.
  - கிரவல் பாதைகள் - ஆசிய வலயத்தின் 50% வேலைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன. அடுத்த கட்டப் பணிகள் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படவுள்ளது.
- அவுஸ்திரேலிய வலயம்
  - ஆழமற்ற தடாக நிர்மாண வேலைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன.
  - 06 யானைகளுக்கான புகலிட நிர்மாண வேலைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன.
  - உத்தியோகபூர்வ குடியிருப்புகள் மற்றும் வலயங்களுக்கான சேவைகள் வழங்கும் வழிகள் மற்றும் மின்சார விநியோகம் கட்டம் 11 நிர்மாண வேலைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன.

மிருகக் காட்சிசாலை அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற செயற்றிட்டங்கள்

- சிறுத்தைகளின் வலயத்தில் 16 அடி உயரமான சங்கிலி வேலி அமைத்தல் மற்றும் வெளியேறுகின்ற கதவின் எஞ்சிய வேலைகளின் 35% வேலைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன. அடுத்த கட்டப் பணிகள் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படவுள்ளது.
- ஆபிரிக்க யானைகளின் புகலிட நிர்மாண வேலைகள் 50 % நிறைவுசெய்யப்பட்டுள்ளன. அடுத்த கட்டப் பணிகளை தொடர்வதற்காக மீண்டும் டென்டர் அழைப்பிற்கான வேலைகள் முன்னெடுக்கப்படுகிறது.
- இல.03 சிங்கங்களின் புகலிடம் என்பவற்றின் 80% வேலைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன.

உரு 1.16 – ஆறு யானைகளுக்கான புகலிடம்



உரு 1.17 – வெளிநாட்டு பறவைகளுக்கான புகலிடம்



உரு 1.18 - விலங்கு பாதுகாப்பு மையங்கள்



உரு 1.19 – செல்லப்பிராணி மண்டலம்



உரு 1.20 - ஆசிய யானை மண்டலத்திற்கும் சிறுத்தை மண்டலத்திற்கும் இடையே 16 அடி உயர சங்கிலி இணைப்பு வேலி



உரு 1.21 – சிங்கத்தின் குகை - எண் 03



மூலம் : ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா

1.6.5 கோணபொல மிருகவள பண்ணை

தெஹிவளை மிருகக் காட்சிசாலையில் தாவர உண்ணி விலங்குகளுக்குத் தேவையான பசுமையான மற்றும் போசாக்கு நிறைந்த உணவுகளின் பகுதியொன்றை வழங்குவதற்காக இந்த பண்ணை 1997 ஆம் ஆண்டில் ஹொரனை கோணபொல பிரதேசத்தில் 16 ஏக்கர்கள் காணியில் நிறுவப்பட்டது. இதுவரை ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா, பின்னவல யானைகள் சரணாலயம் போன்றவற்றுக்குத் தேவையான புல் மற்றும் இளநீர் என்பவற்றை வழங்கப்பட்டுவருகின்றன.

